# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 42/38 — 1973 ජනවාරි 15 වැනි සඳුද — 1973 01.15

42/38 ஆம் இலக்கம்—1973 ம் ஆண்டு சனவரி மாதம் 15 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இல. எம். டி. 12 — கோதுமை மா

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

*கட்டளை*

1973 ம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு மாத்தறை மாவட்ட விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) பத்தினி குட்டிகே ஆனந்த நவரத்ன ஆகிய யான் இக்கட்டளையால்—

(1) 1969 ம் ஆண்டு டிஸம்பர் மாதம் 9 ந் திகதி வெளியான 14881/3 ம் இலக்க அதி விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரமான 1969 ஆம் ஆண்டு டிஸம்பர் மாதம் 6 ந் திகதியைக் கொண்ட எம். டி. 7 ம் இலக்க உணவு விலைக் கட்டளையை உடனடியாக நீக்கிவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் முதலாம் அட்டவணையின் 2 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள விலைகளையே 148 நிகர இருத்தல் நிறையைக் கொண்ட கோதுமை மாவின் ஆகக்கூடிய மொத்த விலையாகவும் இவ்விலைகளுக்குக் கூடுதலாக அதே அட்டவணையின் 1 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நேரொத்த இடப்பரப்புகளில் மொத்த விலைக்கு விற்றலாகாதெனவும் உடனடியாக நடை முறையில் வருமாறும் விதிக்கின்றேன்.

(3) இதனோடிருக்கும் இரண்டாம் அட்டவணையின் 2 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள விலைகளையே ஒரு நிகர இருத்தலைக் கொண்ட கோதுமை மாவின் ஆகக் கூடிய சில்லறை விலையாகவும் இவ்விலைகளுக்குக் கூடுதலாக அதே அட்டவணையின் 1 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள நேரொத்த இடப்பரப்புகளில் விற்கலாகாதெனவும் உடனடியாக நடைமுறையில் வருமாறும் விதிக்கிறேன்.

(4) இக்கட்டளையின் நோக்கத்திற்காக

(அ) எத்தொகையான எவ்விதமான கோதுமை மாவையோ திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது 148 நிகர இருத்தல் நிறையைக் கொண்ட அல்லது அதற்குக் கூடிய தொகையையோ ஒரு முறையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும்,

(ஆ) 148 நிகர இருத்தல் நிறைக்குக் குறைந்த கோதுமை மாவை உட்கொள்வதற்கோ உபயோகிப்பதற்கோ விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும்,

(இ) "கோதுமை மா" என்பது கோதுமை மாவுடன் எப்படியாவது கலந்த சோளம் மாவையும் குறிக்குமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) சோளம் மாவைத் தவிர்ந்த வேறு எப்பொருளுடனும் கலந்த கோதுமை மாவை விற்கலாகாதென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) கோதுமை மாவையும் சோளம் மாவையும் கலந்து விற்குமிடத்து சோளம் மாவின் நிறை 10%க்குக் கூடியதாக இருக்கக் கூடாதென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிட்டுள்ள விலைகளில் அவ்வாறு விற்கப்படும் மாவைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(8) இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் கோதுமை மாவைத் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது எவ்வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட கோதுமை மாவில் சிறு பகுதியையும் இக்கட்டளையால் கோதுமை மாவிற்கு விதிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகள் ஒரு அங்குலத்துக்குக் குறையாத எண்களில் விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி வாங்குபவரால் நன்றாகப் பார்க்கக்கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்துப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(9) இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் கோதுமை மாவை மொத்தமாகவோ சில்லறையாகவோ விற்கும் ஒவ்வொரு வியாபாரியும் கோதுமை மாவை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச் சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகின்றேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி;

(ஆ) விற்ற கோதுமை மாவின் நிறை;

(இ) விற்ற கோதுமை மாவிற்குக் கொடுத்த விலை;

(ஈ) எவ்விதமான விற்பனை அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா.

(10) இக்கட்டளையின் நோக்கத்திற்காக "இருத்தல்" அல்லது "இரு" என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1973 ம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ந் திகதி மு. ப. 11.00 மணிக்கு மாத்தறைக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

பீ. எ. நவரத்ன,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மாத்தறை மாவட்டம்

### முதலாம் அட்டவணை

| பத்தி 1 | | பத்தி 2<br>148 நிகர இருத்தலின் உச்ச மொத்த விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| 1. | மாத்தறை நகர சபைப் பகுதி, தெய்வந்துறை ப. ச. பகுதி, மடிஹ கொடகம கி. ச. பகுதி, அபரக்க பபரந்த கி. ச. பகுதி, நாய்மன-மாகாவிட கெகனந்துற கி. ச. பகுதி | 56 85 |
| 2. | கந்நற கோட்டகொட, திஹகொட கி. ச. பகுதிகள் | 56 88 |
| 3. | ஹக்மன-வளகட கி. ச. | 57 12 |
| 4. | கம்புறுபிடிய, கிரிந்த —புஹுல்வல்ல திக்வல்ல கி. ச. பகுதிகள் | 57 04 |
| 5. | கொடபிடிய கி. ச. பகுதி | 57 08 |
| 6. | றஞ்ஞகொட தெய்யந்தர கி. ச. பகுதிகள் | 57 26 |
| 7. | மொறவக கி. ச. பகுதி (பிடபத்தர கிராம சேவகர் பிரிவைத் தவிர) | 57 32 |
| 8. | தெனியாய கி. ச. பகுதி (கொடபொள தெற்கு, கொடபொள வடக்கு ஆகிய) கிராம சேவகர் பிரிவுகளைத் தவிர | 57 56 |
| 9. | பிடபத்தர கிராம சேவகர் பிரிவு | 57 16 |
| 10. | கொடபொள தெற்கு, கொடபொளவடக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும் பெரளபனுத்தற பென்கமுவ கி. ச. பகுதிகளும் | 57 42 |
| 11. | வெலிகம ந. ச. பகுதி, வெலிகம மிரிஸ்ஸ கி. ச. பகுதிகள் | 56 75 |
| 12. | அகுரஸ்ஸ ப. ச. பகுதி, மாறம்ப கனங்க கி. ச. பகுதிகள் | 56 94 |
| 13. | மாளிம்பொட கி. ச. பகுதி | 56 83 |

### இரண்டாம் அட்டவணை

| பத்தி 1 | | பத்தி 2<br>ஒரு நிகர இருத்தலின் உச்ச சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| 1. | மாத்தறை வெலிகம நகர சபைப் பகுதிகள், தெய்வந்துறை அகுரஸ்ஸ பட்டினசபைப் பகுதிகள், மடிஹ-எகாடகம அபரக்க பபரந்த நாயிமன-மாகாவிடகந்தற, கோட்ட கொட, வெலிகம மிரிஸ்ஸ மாறம்ப கனங்கே மாளிம்பொட கெகனந்துற ஆகிய கி. ச. பகுதிகள் | 0 40 |
| 2. | ஹக்மன-வளக்கட கம்புறுபிடிய, கிரிந்த-புஹுல்வல்ல கொடபிடிய, திக்வல்ல றஞ்ஞகொட தெய்யந்தற, மொறவக, திஹகொட, தெனியாய பெரளபனுத்தற பென்கமுவ ஆகிய கிராமச் சபைகள் | 0 40 |

குறிப்பு. 1. இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல. இவை ஆகக் கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்கலாகாது.

2. 148 நிகர இருத்தலுக்குக் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ கோதுமை மாவை மொத்தமாக விற்கும்பொழுது மேலே சொல்லப்பட்ட 148 இருத்தல் விலையிலிருந்து கணக்கிடுதல் வேண்டும்.

1—865/1

---

உணவு விலைக்கட்டளை எம். டி. 13. — பாண்

### விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

173 ம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு மாத்தறை மாவட்ட விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) பத்தினி குட்டிகே ஆனந்த நவரத்ன ஆகிய யான் இக்கட்டளையால்—

(1) 1969 டிஸம்பர் 7 ந் திகதி வெளியான 14,881/2 இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான 1969 டிஸம்பர் 4 ந் திகதியைக் கொண்ட எம். டி. 10 ம் இலக்க உணவு விலைக்கட்டளையை உடனடியாக நீக்கிவிடுகிறேன் ;

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம் பந்திகளில் குறிப்பிட்டுள்ள விலைகளையே ஆகக் கூடிய விலைகளாகும். முறையே 16 அவுன்ஸ் நிறையுள்ள பாணையும் 8 அவுன்ஸ் நிறையுள்ள பாணையும் இந்த விலைகளுக்கு கூடுதலாக இதனோடிருக்கும் அட்டவணையின் 1 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள நேரொத்த இடப்பரப்புகளில் விற்கலாகாதெனவும் உடனடியாக நடைமுறையில் வருமாறும் விதிக்கிறேன் ;

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக 8 அவுன்ஸுக்கு மேலான நிறையைக் கொண்ட ஒரு பாணையோ அல்லது 8 அவுன்ஸுக்கு மேலான நிறையைக் கொண்ட ஒரு பாணின் பகுதியையோ எவ்விடத்திலாவது விற்குமிடத்து 16 அவுன்ஸ் நிறையுள்ள பாணுக்கு விதிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலையின் விகிதத்திற்கேற்ப கணக்கிடப்பட்ட விலைக்கு கூடுதலாக விற்கலாகாதென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(4) இக்கட்டளையின் நோக்கத்திற்காக 8 அவுன்ஸ் நிறைக்குக் கூடாத ஒரு பாணையோ அல்லது 8 அவுன்ஸ் நிறைக்குக் கூடாத ஒரு பாணின் பகுதியையோ எவ்விடத்திலாவது விற்குமிடத்து இக்கட்டளையால் அப்பகுதிக்கு 8 அவுன்ஸ் நிறையுள்ள பாணுக்கு விதிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலையின் விகிதத்திற்கேற்ப கணக்கிடப்பட்ட விலைக்குக் கூடுதலாக விற்கலாகாதென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(5) பாண் விற்குமிடத்து இக்கட்டளையால் விதிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலையில் அப்பாணைச் சுற்றிக்கொடுக்க உபயோகிக்கும் பொருளின் விலையும் உள் அடக்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பினும் பாணைத் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது எவ்வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் இக்கட்டளையால் பாணுக்கு விதிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளைக் குறிக்கும் விளம்பரம் மக்களின் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் பாண் விற்கும் ஒவ்வொருவரும் அப்பாணை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிடும் பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற பாணின் விபரம் ;

(இ) விற்ற பாணின் தொகையும் ;

(ஈ) விற்ற பாணுக்குக் கொடுக்கப்பட்ட விலையும்.

(8) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " அவு " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண அவுன்ஸ் நிறையாகும்.

1973 ம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ந் திகதி மு. ப. 11 மணிக்கு மாத்தறைக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

பீ. ஏ. நவரத்ன,
உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு),
மாத்தறை மாவட்டம்.

அட்டவணை

| பத்தி 1<br>இடப்பரப்பு | பத்தி 2<br>8 அவு. கூடுதலான பாணின் ஆகக்கூடிய விலை 16 அவுன்சுக்கு<br>ரூ. ச. | பத்தி 3<br>8 அவு. நிறையுள்ள பாணின் ஆகக்கூடிய விலை 8 அவுன்ஸ்<br>ரூ. ச. |
|---|---|---|
| மாத்தறை, வெலிகம ஆகிய நகரசபை எல்லைப்பகுதிக்குள் தெய்வந்துறை, அகுரஸ்ஸ, ஆகிய பட்டின சபை எல்லைப்பகுதிக்குள், கந்தற கோட்டகொட, கனங்கே, வெலிகம, மிரிஸ்ஸ, மடிஹ–கொடகம, கெகனந்துற, அபரக்க, பபரந்த, நாயிமன–மாகாவிட, மாளிம்பொட, திஹகொட ஆகிய கிராமச்சபை எல்லைப்பகுதிகள் .. | 0 40 .. | 0 20 |
| மாத்தறை மாவட்டத்துக்குள் மேலே குறிப்பிடாத எல்லாப் பகுதிகளும் .. | 0 41 .. | 0 20 |

குறிப்பு : இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல. இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்கலாகாது.

1–865/2

---

கோதுமை மா

விலைக் கட்டளை இலக்கம் 110

**விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம் (அத்தியாயம் 173)**

கட்டளை

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவின் அதன் 3 (2) ம் உட்பிரிவோடு சேர்த்து வாசிக்குமிடத்து எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு வவுனியா மாவட்ட விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) கந்தையா சிவப்பிரகாசம் ஆகிய நான் இக்கட்டளையால்—

(அ) 1968 ம் ஆண்டு மாசி மாதம் 21 ந் திகதி வெளிவந்த 14,789/19 ம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான வி. 109 ம் இலக்கம் கொண்ட கோதுமை மாவின் விலைக்கட்டளையை உடனடியாக எடுத்துவிடுகிறேன் ;

(ஆ) இத்துடன் இருக்கும் அட்டவணையில் 2 ம் பந்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் நிகர 148 இருத்தல் கோதுமை மாவின் விலையை உடனடியாக ஒரு மொத்த வியாபாரியின் மொத்த விலையாகும் ;

(இ) இத்துடன் இருக்கும் அட்டவணையில் 3 ம் பந்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் விலையே ஒரு சில்லறை வியாபாரி நிகர இருத்தல் ஒன்றைச் சில்லறை வியாபாரி பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகும். குறிக்கப்பட்ட அட்டவணையில் முதலாம் பத்தியில் குறிக்கப்பட்ட இடங்களில் குறித்த விலைகளுக் கூடுதலாக விற்றலாகாது ;

(ஈ) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) குறித்த அட்டவணையில் முதலாம் பத்தியில் விபரிக்கப்பட்ட கோதுமை மாவின் 148 நிகர இருத்தலை திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது கூடுதலாக ஒரு முறையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் என்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையில் விபரிக்கப்பட்ட கோதுமை மாவில் 148 இருத்தலுக்குக் குறைந்த தொகையை பாவிப்பதற்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்று கட்டளையிடுகிறேன் ;

(இ) " கோதுமை மா " என்பது கோதுமை மாவுடன் எப்படியாவது கலந்த சோளம் மாவையும் குறிக்குமென்று கட்டளையிடுகிறேன் ;

(உ) சோளம் மாவைத் தவிர்ந்த வேறு எப்பொருளுடனும் கலந்த கோதுமைமாவை விற்றல் ஆகாது என்று கட்டளையிடுகிறேன் ;

(ஊ) கோதுமை மாவையும் சோளம் மாவையும் கலந்து விற்குமிடத்து சோளம் மாவின் நிறை 10 வீதற்திற்குக் கூடுதலாக இருக்கலாகாது என்று கட்டளையிடுறேன் ;

(எ) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடத்திலும் விபரிக்கப்பட்டிருக்கும் கோதுமை மாவை தமது வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட கோதுமை மாவின் ஒரு சிறு தொகையையும் இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக் கூடிய விலைகள் ஒரு அங்குலத்திற்குக் குறையாத எண்களில் விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும் வாங்குபவரால் நன்றாகப் பார்க்கக்கூடியதாக அக் கொள்கலத்தில் இணைத்துப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென கட்டளையிடுகிறேன் ;

(ஏ) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இருத்தல் " அல்லது " இரு " என்பது அவோர்ட்டு போஸ் எடுத்தலளவையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்று கட்டளையிடுகிறேன் ;

(ஐ) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடத்திலும் கோதுமை மாவை மொத்தமாக அல்லது சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச் சீட்டு ஒன்று கொடுக்கவேண்டுமெனக் கட்டளையிடுகிறேன் ;

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை ;

(இ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை அதாவது மொத்த விற்பனையாக அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(ஒ) குறித்த அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள கோதுமை மா விற்குமிடத்து அப்பொருளைச் சுற்றிக் கொடுக்கும் பொருள் அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்க வேண்டும் என்று கட்டளையிடுகிறேன்.

1973 ம் ஆண்டு தை மாதம் 12 ந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு வவுனியா கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

க. சிவப்பிரகாசம்,
உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி.

கச்சேரி,
வவுனியா.

அட்டவணை

| பத்தி 1<br>பகுதி | பத்தி 2<br>148 நிகர இருத்தல் கொண்ட கோதுமை மாவிற்கு ஆகக் கூடிய மொத்த விலை | | பத்தி 3<br>நிகர இருத்தல் கோதுமை மாவை விற்றல், ஆகக் கூடிய சில்லறை விலை |
|---|---|---|---|
| | ரூ. ச. | | ரூ. ச. |
| (1) வவுனியா தெற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுகள் (தமிழ்/சிங்களம்) | 57 19 | .. | 0 40 |
| (2) பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் வெண்கலச் செட்டிகுளம் பிரிவு .. | 57 76 | .. | 0 40½ |
| (3) வவுனியா வடக்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவில் மாங்குளம், புளியங்குளம், கனகராயன்குளம், கிராமவிதானைப் பகுதிகளைத் தவிர்ந்த ஏனைய கிராம விதானைகளின் பகுதிகள் .. .. .. | 57 67 | .. | 0 40½ |
| (4) வவுனியா வடக்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவில் சேர்ந்த கிராம விதானைகளின் பகுதிகள் மாங்குளம், புளியங்குளம், கனகராயன்குளம் .. | 57 76 | .. | 0 40½ |
| (5) வவுனியா கரைதுறைப்பற்றுப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவும் புதுக் குடியிருப்பு .. .. .. | 58 06 | .. | 0 40½ |

குறிப்பு.—(1) இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்கள் விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல, இவை ஆகக்கூடிய விலைகள் ஆகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது ;

(2) 150 முழுமையான இருத்தல்களுக்குக் கூடிய அல்லது குறைந்த தொகை கோதுமைமாவை மொத்தமாக விற்கும் பொழுது அதன் ஆகக்கூடிய மொத்த விலை மேலே குறிப்பிட்ட 150 முழுமையான இருத்தலின் ஆகக்கூடிய மொத்த விலையிலிருந்து கணிக்கப்பட்ட சராசரியாகும்.

1–866/1

---

விலைக் கட்டளை இலக்கம் : வி. 111. பாண்

## விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம் (அத்தியாயம் 173)

### கட்டளை

விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (அத்தியாயம் 173) 4 ம் பிரிவை அதன் 3 (2) ம் உட்பிரிவோடு சேர்த்து வாசிக்குமிடத்து எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு வவுனியா மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) கந்தையா சிவப்பிரகாசம் ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1968 ம் ஆண்டு மாசி மாதம் 21ந் திகதி வெளிவந்த 14,789/19 ம் இலக்க அதிவிசேட அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான 1968 ம் ஆண்டு தை மாதம் 18 ந் திகதியைக் கொண்ட வி. 108 ம் விலைக்கட்டளையை உடனடியாக இத்தால் எடுத்துவிடுகின்றேன் ;

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம் பந்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளே 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் இடப்பரப்பில் விற்கக் கூடிய ஆகக்கூடிய விலையாகவும் விதிக்கிறேன் ;

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) 8 அவுன்சுக்கு மேலான நிறையைக் கொண்ட ஒரு பாணை எவ்விடத்திலாவது விற்குமிடத்து, 16 அவுன்சு பாணுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலையின் சராசரி விலையின்படி கணக்கிடப்படவேண்டுமெனவும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(4) இக்கட்டளையின் நோக்கத்திற்காக 8 அவுன்சு நிறையே அல்லது 8 அவுன்சுக்குக் கூடாத நிறையைக் கொண்ட பாணின் ஒரு பகுதியையோ எவ்விடத்திலாவது 8 அவுன்சு நிறையைக் கொண்ட பாணின் விலையின்படி கணக்கிடப்பட்ட விலைக்குக் கூடுதலாக அவ்விடப்பரப்பில் விற்றல் ஆகாது என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(5) இக்கட்டளையின் நோக்கத்துக்காக குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(6) இக்கட்டளையின் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் பாணைத் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வைத்திருப்பவர் அவ்விடத்துக்கு விதிக்கப்பட்டுள்ள பாணின் ஆகக்கூடிய விலையைக் குறிக்கும் விளம்பரம் ஒன்றை மக்கள் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள இடப்பரப்பில் பாண்விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்கு பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற பாணின் விபரம் ;

(இ) விற்ற பாணின் தொகை ;

(ஈ) விற்ற பாணுக்குக் கொடுக்கப்பட்ட விலையும் ;

(8) இக்கட்டளையின் நோக்கத்துக்காக "அவுன்சு" என்பது அவோர்டுப்போஸ் எடுத்தலளவையின் முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

1973 ம் ஆண்டு தை மாதம் 12 ந் திகதி நண்பகல் 12 மணிக்கு வவுனியா கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

கந்தையா சிவப்பிரகாசம்,
உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு),
வவுனியா மாவட்டம்.

கச்சேரி,
வவுனியா.

அட்டவணை

| பத்தி 1 இடம் | பத்தி 2 8 அவுன்சுக்குக் கூடுதலான நிறையுள்ள பாணின் ஆகக் கூடிய விலை | பத்தி 3 8 அவுன்சுக்கும் அதற்கும் குறைந்த நிறையுள்ள பாணின் ஆகக்கூடிய விலை |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| வவுனியா மாவட்டம் .. .. .. .. | 0 41 (16 அவுன்ஸ்) .. | 0 22 (8 அவுன்ஸ்) |

1–866/2

---

உணவு விலைக்கட்டளை இல. எம். எல். 1973/1 — கோதுமை மாவு.

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (பந்தி 173) 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு மாத்தளை பரிபாலன மாவட்ட பிரதி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) சிறில் கமகே ஆகிய யான், இக்கட்டளையால்—

(1) 30.11.1967 ம் திகதி வெளிவந்த 14,777/2 ம் இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 24.11.1967 ந் திகதியைக் கொண்ட எம். எல். 1967/7 ம் இலக்க உணவு விலைக்கட்டளையை உடனடியாக எடுத்து விடுகிறேன்.

(2) இதனுேடிணைக்கப்பட்டிருக்கும் அட்டவணையின் 2 ம் பந்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த நிறை 150 இருத்தல்களின் ஆகக்கூடிய மொத்த விலைகளாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். அதே அட்டவணையின் 1 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள இடங்களில் இவ்விலைகளுக்கு மேலதிகமாக கோதுமை மாவு விற்கலாகாது.

(3) இதனுேடிணைக்கப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே நிகர இருத்தல் ஒன்றிற்கு ஆகக்கூடிய சில்லறை விலைகளாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். அதே அட்டவணையின் 1 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள இடங்களில் இவ்விலைகளுக்கு மேலதிகமாக கோதுமை மாவு விற்கலாகாது.

(4) இக்கட்டளையின் நோக்கங்களுக்காக—

(அ) திரும்பவும் விற்பனை செய்ய வென்று விற்கப்படும் எந்த அளவு கோதுமை மாவையும் அல்லது 150 மொத்த நிறை இருத்தல்களோ அதற்குக் கூடுதலாகவோ ஒரே தரத்தில் விற்கப்படும் கோதுமை மாவு மொத்த விற்பனையாகக் கருதப் படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(ஆ) பாவிப்பதற்காகவோ அல்லது உட்கொள்வதற்காகவோ 150 மொத்த நிறை இருத்தல்களுக்குக் குறைவாக விற்கப்படும் எத்தொகை கோதுமை மாவும் சில்லறை விற்பனையாகக் கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(இ) " கோதுமை மாவு " என்பது சோளம் மாவும் கலந்ததாக இருக்குமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) சோளம் மாவினைத் தவிர்ந்த வேறெவ்விதப் பொருள்களுடனும் கலக்கப்பட்ட கோதுமை மாவினை எவருக்கும் விற்கலாகாதென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) நூற்றுக்கு பத்து வீதத்திற்கு கூடுதலான நிறையுள்ள சோளம் மாவினை கொண்ட கோதுமை மாவினை எவருக்கும் விற்கலாகா தென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) கோதுமை மாவினை விற்குமிடத்து அதனைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அவற்றின் விலையும் இக்கட்டளையால் நிர்ணயிக்கப்படும் ஆகக்கூடிய விலைகளுக்குள் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(8) கோதுமை மாவைத் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது அல்லது எவ்வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்திலுள்ள கோதுமை மாவின் தொகை, இக்கட்டளையால் நிர்ணயிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள், ஒரு அங்குலத்திற்குக் குறையாத உயரத்தைக் கொண்ட எண்களால் விலைக்குறிப்பு அட்டையில் அல்லது விளம்பரப் பலகையில் எழுதப்பட்டு கோதுமை மாவும் ஆகக்கூடிய விலைகளும் பாவனையாளர் ஒவ்வொருவருக்கும் தெரியக்கூடியதாக அக்கொள்கலத்தில் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(9) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இருத்தல் " அல்லது " இரு " என்பது அவ்வோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(10) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், கோதுமை மாவை மொத்தமாக விற்கும் எவரும் குறித்த பொருளைச் சில்லறையாக விற்கும் எவரும் இப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவன வற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற கோதுமை மாவின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற கோதுமை மாவிற்குக் கட்டப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை (மொத்தமாகவோ அல்லது சில்லறையாகவோ).

மாத்தளைக் கச்சேரியில் 1973 ம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ம் திகதி காலை 10.00 மணிக்கு கையொப்பமிடப்பட்டது.

சிறில் கமகே,
பிரதி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு),
மாத்தளை மாவட்டம்.

அட்டவணை

| பந்தி 1 எல்லை | | பந்தி 2 150 மொத்த இருத்தல்களின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை | | பந்தி 3 நிகர இருத்தல் ஒன்றின் ஆகக் கூடிய சில்லறை விலை |
|---|---|---|---|---|
| | | ரூ. ச. | | ரூ. ச. |
| மாத்தளை மாநகரசபை எல்லை, கொஹொான் சியபற்று, கம்பஹசியற்று, அஸ்கிரி உடசியபற்று, அஸ்கிரி பல்லேசிய பற்று, மாத்தளை உடசியபற்று, மாத்தளை மெதசியபற்று .. .. | | 56 75 | .. | 0 39½ |
| இநாமலுவ கோறளே, வகபனஹ பல்லேசிய பற்று, வகபனஹ உடசியபற்று, உடுகொட உடசியபற்று, கந்தப்பாலகோறளே, உடுகொட பல்லேசிய பற்று .. .. .. | | 57 16 | .. | 0 40 |
| அம்பன்கங்க கோறளே, மாத்தளை பல்லேசிய பற்று, கங்கல பல்லேசியபற்று, கங்கல உடசியபற்று, கந்தப்பிட்டவல கிராம அதிகாரியின் பிரிவைத் தவிர்த்து .. .. .. | | 56 81 | .. | 0 39½ |
| லக்கல பல்லேசியபற்று, பல்லேகம கிராம அதிகாரியின் பிரிவைத் தவிர்த்து .. .. | | 57 62 | .. | 0 41½ |
| பல்லேகம கிராம அதிகாரியின் பிரிவு (எல். பீ. பீ.) கந்தப்பிட்டவல கிராம அதிகாரியின் பிரிவு .. | | 57 62 | .. | 0 40 |
| லக்கல உடசிய பற்று .. .. .. | | 56 81 | .. | 0 41 |

குறிப்பு.—(1) இவ்விலைகள் கோதுமை மாவினை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்குக் கூடுதலாக கோதுமை மாவினை விற்றலாகாது.

(2) 150 மொத்த இருத்தல்களுக்குக் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ அத்தொகை கோதுமை மாவினை மொத்த விற்பனையாக விற்குமிடத்து, அதற்குக் கொடுக்கக் கூடிய அதிகூடின விலையை மேலே சொல்லப்பட்ட 150 மொத்த இருத்தல்களின் விலையிலிருந்து கணக்கிடுதல் வேண்டும்.

1–868/1.

---

உணவு விலைக்கட்டளை இல. எம். எல். 1973/2 பாண்

## விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (பந்தி 173) 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு மாத்தளை பரிபாலன மாவட்ட பிரதி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) சிறில் கமகே ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 30. 11. 1967 ம் திகதி வெளிவந்த 14,777/2 ம் இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 24.11.67 ம் திகதியைக் கொண்ட எம். எல் 1967/8 ம் இலக்க உணவு விலைக்கட்டளையை உடனடியாக எடுத்துவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம் பந்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே 16 அவுன்ஸ் நிறையுள்ள 8 அவுன்ஸ் நிறையுள்ள பாணின் ஆகக்கூடிய விலையாகவும் உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். குறித்த விலைக் கதிகமாக குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள இடப்பரப்பில் விற்றலாகாதென ஆஞ்ஞையிடுகிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக 8 அவுன்ஸுக்கு மேலான நிறையைக் கொண்ட ஒரு பாணையோ அல்லது 8 அவுன்ஸுக்கு மேலான நிறையைக் கொண்ட ஒரு பாணின் பகுதியையோ எவ்விடத்திலாவது விற்குமிடத்து 16 அவுன்ஸ் பாணுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலையின் சராசரி விலையின்படி கணக்கிடப்படவும் வேண்டுமெனவும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையின் நோக்கத்துக்காக 8 அவுன்ஸ் நிறையை அல்லது 8 அவுன்ஸுக்கு கூடாத நிறையைக்கொண்ட பாணின் ஒரு பகுதியையோ எவ்விடத்திலாவது 8 அவுன்ஸ் நிறையைக் கொண்ட பாணின் விலையின்படி கணக்கிடப்பட்ட விலைக்குக் கூடுதலாக அவ்விடப்பரப்பில் விற்றலாகாதென ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையின் நோக்கத்துக்காக விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளுள் பாணைச் சுற்றிக் கொடுக்கும் உறை ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பகுதியிலும் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது பாண் வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் இக்கட்டளையால் பாணுக்கு விதிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலையைக் குறிக்கும் விளம்பரம் ஒன்றை வாங்குபவரின் பகிரங்க பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள இடப்பரப்பில் பாண் விற்கும் ஒவ்வொருவரும் அதனை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற பாணின் விபரம் ;

(இ) விற்ற பாணின் தொகையும் ;

(ஈ) விற்ற பாணிற்குக் கொடுக்கப்பட்ட விலையும்.

(8) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " அவுன்ஸ் " அல்லது " அவு. " என்பது அவ்வோடுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

மாத்தளைக் கச்சேரியில் 1973 ம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ம் திகதி காலை 10.00 மணிக்கு கையொப்பமிடப்பட்டது.

சிறில் கமகே,
பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மாத்தளை மாவட்டம்.

அட்டவணை

| பத்தி 1<br>எல்லை | பத்தி 2<br>8 அவுன்ஸுக்கு கூடுதலான நிறையுள்ள பாணின் ஆகக்கூடிய விலை (16 அவுன்ஸுக்கு)<br>ரூ. ச. | பத்தி 3<br>8 அவுன்ஸும் அதற்குக் குறைந்த நிறையுள்ள பாணின் ஆகக்கூடிய விலை (8 அவுன்ஸுக்கு)<br>ரூ. ச. |
|---|---|---|
| (1) மாத்தளை மாநகரசபை எல்லை .. .. .. | 0 40 .. | 0 20½ |
| (2) மாத்தளை மாநகரசபை எல்லை தவிர்த்து மாத்தளை காரியாதிகாரியின் பிரிவு, ரத்தொட்டை உப கவண்மெண்ட் ஆசண்ட் பிரிவு, தம்புள்ள உப கவண்மெண்ட் ஆசண்ட் பிரிவு கலேவன காரியாதிகாரியின் பிரிவு, லக்கல உடசியப்பற்றும், லக்கல பள்ளேசிய பற்றும் தவிர்ந்து லக்கல காரியாதிகாரியின் பிரிவும் உக்கவுனையும் நாவுல உப கவண்மெண்ட் ஆசண்ட் பிரிவும் .. .. .. | 0 41 .. | 0 21 |
| (3) லக்கள உடசியப்பற்று ; லக்கல பள்ளேசியப்பற்று .. | 0 42 .. | 0 21½ |

1–868/2

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.